# பரிசுத்த ஆவி இயல்

## அறிமுகம்

பரிசுத்த ஆவியானவரை குறித்து படிக்கும் பாடத்திற்கு பரிசுத்த ஆவி இயல் என்று பெயர். இறையில் ரீதியிலே இந்த பாடத்திற்கு நியூமட்டாலஜி (pneumatology) என்பதாகும். இது பரிசுத்த ஆவியானவரை குறித்ததான உபதேச சத்தியங்களை படிக்கக்கூடிய ஒரு பாடமாக இருக்கிறது. நம்முடைய வேதத்தின் தொடக்கம் மற்றும் இறுதி வசனங்களில் பரிசுத்த ஆவியான தேவனைக் குறித்து குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு சுவாரஸ்யமான உண்மை. வேதத்தின் தொடக்கத்தில், சிருஷ்டிப்பில் அவரது செயலை நாம் பார்க்கிறோம், தண்ணீரின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். (ஆதி 1:2) மற்றும் எதிர்காலத்தில் நித்தியத்தில் பிரவேசிக்கும்போது, அதே ஆவியானவர் மணவாட்டியுடன் சேர்ந்து, “வாருங்கள்” என்று கூறுகிறார் (வெளி 22:17).

பரிசுத்த ஆவி யார்? பலர் இருபதாம் நூற்றாண்டை பரிசுத்த ஆவியின் நூற்றாண்டு என்று முத்திரை குத்தியுள்ளனர். காரணம் பெந்தேகோஸ்தே சபைகளின் பரவலானது… ஆவியின் செயல்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததுதான். சுவிசேஷப் பணிக்கான இந்த நூற்றாண்டின் அக்கறை, இதை நிறைவேற்ற ஆவியின் வல்லமையை அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது. பரிசுத்த ஆவியின் செயல்கள் மீதான இந்த கவனம் ஒரு நல்ல விஷயமாக இருந்தபோதிலும், அது வேதப்பூர்வமாக வழிநடத்தப்படவில்லை; எனவே வேத வசனத்தின் அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய தேவை இன்று இன்னும் அதிகமாக உள்ளது.

## வார்த்தைக்கான அர்த்தம்

பரிசுத்த ஆவியானவர் என்பதற்கு எபிரெய வார்த்தையில் ‘ரூவா’ என்ற சொல்லும் கிரேக்க வார்த்தையில் ‘நியூமா’ என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. இதற்கான அர்த்தம் ‘காற்று’ அல்லது ‘சுவாசம்’ என்பதாகும். காரணம் ‘ஆவி’ என்று சொல்லும்பொழுது காணமுடியாததினாலே இந்த அர்த்தத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. சிலர் ‘வல்லமை’ என்ற அர்த்தத்தையும் சொல்லுகிறார்கள்.

- ❖ *காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார் (யோவான் 3:8). இங்கே காற்று என்பதற்கு ‘நியூமா’ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.*
- ❖ *இந்த வார்த்தை கண்ணுக்கு தெரியாத சக்திக்கும் பெரும்பாலும் தேவதூதர்களுக்கும்கூட பயன்படுத்தப்பட்டுள்ளது (எபி 1:14)*

## இப்பாடத்தின் முக்கியத்துவம்

- இதை படிப்பதின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் ‘தேவன்’ என்பதை அறிந்துகொள்ளமுடியும்.
- திரித்துவத்தில் இந்த பரிசுத்த ஆவியானவர் மூன்றாவது நபராக இருக்கிறார் என்கிற ஒரு சத்தியத்தை அறிகிறோம்.
- அடுத்ததாக பரிசுத்த ஆவியானவர் பிதாவாகிய தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இணையானவர் அதாவது சரிசமமானவர் என்பதையும் படிக்கமுடியும்.

மிக முக்கியமான இந்த அடிப்படையான சத்தியங்கள் நமக்கு அவசியமாக இருக்கிறது. ஏனென்றால் இன்றைக்கு அநேகர் பரிசுத்த ஆவியானவரை குறித்து தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் பரிசுத்த ஆவியானவர் என்பவர் தேவனுடைய செயல்படும் ‘வல்லமை’ என்றும் தேவனுடைய செயலை நிறைவேற்றுவதற்கான ‘ஒரு சக்தி’ என்றும் சொல்கிறார்கள். இன்னும் சிலர் இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களை கொடுக்கக்கூடியவர் என்கிறார்கள். ஆக, அவர்கள் சொல்ல வருகிற கருத்து என்னவென்றால் பரிசுத்த ஆவியானவர் தேவன் அல்ல; அவர் ‘வல்லமை’ உடையவர்; அவர் ‘ஆள்த்தன்மை’ உடையவர் அல்ல என்றெல்லாம் தவறாக போதிக்கிறார்கள் மட்டுமல்ல தவறாக புரிந்தும் கொண்டிருக்கிறார்கள். காரணம் கீழ்க்கண்ட வசனங்கள் மூலம் ஆவியானவர் அவருடைய சொந்த வல்லமையுடன் தொடர்புடையவர்தான், ஆனாலும் அதிலிருந்து வேறுபடுத்தப்படுகிறார், இதனால் அவர் வெறும் சக்தியின் உருவகம் என்று நாம் முடிவு செய்யக்கூடாது.

- லூக்கா 4:14 – பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்.
- அப் 10:38 – நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்
- 1 கொரி 2:4,5 – உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.

ஆகவே இந்த பாடத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் "தேவன்தான்" என்றும்; அவர் "பிதாவுக்கும் குமாரனுக்கும் இணையானவர்" என்கிற அடிப்படை சத்தியங்களை இதன் மூலமாக கற்றுக்கொள்ளபோகிறோம்.

## A. பரிசுத்த ஆவியானவர் ஆள்த்தன்மை உடையவர்

பல்வேறு நிலைகளிலே தேவனுடைய திருவார்த்தையை நாம் படிக்கும் பொழுது பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆள்த்தன்மை உடையவராக இருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும். பொதுவாக ஒரு நபர் என்று சொன்னால் அவருக்கு சரீரம் இருக்கவேண்டும் என்றுதான் நாம் புரிந்துகொள்கிறோம். ஆனால், ஒரு ஆள்த்தன்மையுடையவர் ஒரு நபர் என்று சொல்லும்பொழுது மூன்று விஷயங்களின் அடிப்படையில் தான் ஒருவரை நபர் என்று சொல்லுகிறார்கள்.

i. முதலாவது சிந்தனையின் அடிப்படையில் அல்லது அறிவின் அடிப்படையில் (Intellect)
ii. இரண்டாவது அவருடைய உணர்வின் அடிப்படையில் (Emotions)
iii. மூன்றாவதாக அவருடைய சித்தத்தின் அடிப்படையில் (Will)

a. **அறிவு, உணர்வு, சித்தம் அல்லது விருப்பம் இந்த மூன்றும் இருக்கக்கூடியவர்கள் தான் ஒரு நபர் என்று நாம் சொல்ல முடியும்.** பரிசுத்த ஆவியானவர் ஆள்த்தன்மை உடையவரா என்று கேட்டால் வேத வசனத்தின் ஆதாரத்தில் அவர் ஆள்த்தன்மை உடையவர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

1. <u>ஆவியானவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்</u>

நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், **ஆராய்ந்திருக்கிறார்.** மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான் (1 கொரி 2:10,11)

ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார் (ரோமர் 8:27)

2. <u>ஆவியானவர் உணர்வுள்ளவராக இருக்கிறார்</u>

அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் (எபேசியர் 4:30).

நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் (ரோமர் 15:30).

3. <u>ஆவியானவர் சித்தமுள்ளவராக இருக்கிறார்</u>

இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார் (1 கொரி 12:11) - ஆவிக்குரிய வரங்களை அவருடைய சித்தத்தின்படியே பகிர்ந்துகொடுக்கிறார்.

அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார் (அப் 16:6,7) – பரிசுத்த ஆவியானவர் அவருடைய சித்தத்தின்படி நம்மை வழிநடத்துகிறார்.

ஆக, பரிசுத்த ஆவியானவர் இந்த மூன்று ஆள்த்தன்மையினுடைய குண பண்புகளை உடையவராக இருக்கிறார் ஆகவே, அவர் காற்று அல்ல; ஒரு வல்லமை அல்ல; அவர் ஒரு நபர் என்பதை நாம் அடிப்படையாக புரிந்து கொள்ள முடியும்.

b. **அவருடைய கிரியைகள் மூலமாக அவர் ஆள்த்தன்மையுடையவர் என்பதை அறியலாம்.**

a. சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் (யோவான் 16:13)

- ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் (வெளி 2:7,17,29….) - **பேசுகிறவர்.**
- என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவான் 14:26) - **போதிக்கிறார்;** கிறிஸ்து சொன்னதை **நினைவுபடுத்துகிறார்.**

b. அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8) - **உணர்த்தக்கூடியவர்**

c. பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சிகொடுப்பார் (யோவான் 15:26) - **சாட்சிகொடுக்கிறவர்**

d. அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார் (ரோமர் 8:26) - **உதவிசெய்கிறார்; வேண்டுதல்செய்கிறார்.**

e. அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார் (அப்போஸ்தலர் 16:6,7) - **தடைசெய்கிறார்; வழி காட்டுகிறார்.**

f. அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார் (அப் 13:2) - **தமது . ஊழியத்திற்காக அழைக்கிறார்.**

g. ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (அப் 20:28) - **சபையில் மூப்பர்களை ஏற்படுத்துகிறார்.**

c. **நாம் அவரை நடத்தும் விதத்தின் மூலமாக அவர் ஆள்தன்மையுடையவர் என்பதை அறியலாம்.**

a. வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள் (அப் 7:51) - **பரிசுத்த ஆவிக்கு எதிர்த்துநிற்கிறோம்.**

b. அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் (எபேசியர் 4:30) - **துக்கப்படுத்துகிறோம்.**

c. தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள் (எபி 10:29) - **நிந்திக்கிறோம்**

d. பேதுரு அவனை நோக்கி: அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? (அப் 5:3) - **பொய்சொல்கிறோம்.**

e. ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப்பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை (மத் 12:31,32) - பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசுகிறோம்.

f. பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்துச் சிந்தனை பண்ணிக்கொண்டிருக்கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார் (அப் 10:19,20) – கீழ்படிகிறோம்

## d. மற்றவர்களோடு உள்ள உறவிலே அவர் ஆள்தன்மையுடையவர் என்பதை அறியலாம்.

a. அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது (அப் 15:29) - பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களோடு தொடர்புபடுத்தி பேசுகிறார்.

b. அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார் (யோவான் 16:14) - பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவோடு தொடர்புபடுத்தி பேசப்படுகிறார்.

c. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, (மத் 28:19) - பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனோடும் தொடர்புபடுத்தி பேசப்படுகிறார் (நாமங்கள் அல்ல; நாமம்)

- கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக (2 கொரி 13:14).

## e. இலக்கண ரீதியில் அவர் ஆள்த்தன்மையுடையவர் என்பதை அறியலாம்.

புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் பல முறை ஆவியைக் குறிக்க ஆண்பால் பிரதிபெயரைப் பயன்படுத்தியுள்ளர்கள். இந்த விதிவிலக்கின் தெளிவான எடுத்துக்காட்டு யோவான் 16:13–15 ஆகும், சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.

நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் ‘சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை’ அவர் உங்களுக்குத் தந்தருளுவார் – தேற்றரவாளன் (யோவான் 14:16)

- ‘வேறொரு’ - என்பது மூலமொழியில் என்னைப்போன்ற ஒருவர் என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்து எப்படி ஆள்த்தன்மை உடையவராக இருக்கிறாரோ அதுபோல பரிசுத்த ஆவியானவரும் ஆள்த்தன்மை உடையவராக இருக்கிறார்.

உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவான் 14:17).

வேதப்பூர்வ ஆதாரங்களின் இந்த வரிகள் ஒவ்வொன்றும் பரிசுத்த ஆவியானவர் நம்மைப் போலவே உண்மையான நபர் என்று கூறுகிறது.

# B. பரிசுத்த ஆவியானவர் தெய்வீகத்தன்மை உடையவர்

'பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் அல்லது ஆளத்தன்மை உடையவர் மாத்திரமல்ல அவர் தெய்வீக தன்மையுடையவர் அதாவது அவர் ‘தேவன்’ என்கிற ஒரு சத்தியத்தை நாம் இதில் படிக்கப்போகிறோம். இன்று மனிதர்களுடைய தவறான புரிந்துகொள்ளுங்கள் என்னவென்றால்: பிதாவானவர் எல்லாருக்கும் மேலாக இருக்கிறார் அதற்கு அடுத்தபடியாக இயேசு கிறிஸ்து

இருக்கிறார் அதற்கு அடுத்தபடியாகதான் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்ற தவறான கருத்து நிலவுகிறது. ஆனால் தேவனுடைய திரு வார்த்தையானது பிதாவானவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் மற்றும் பரிசுத்த ஆவியானவர் இவர்கள் மூவரும் சரிசமமாக இருக்கிறார்கள் என்பதைத்தான் தெளிவுபடுத்துகிறது. முதலாவதாக ஒருவரை தேவன் என்று சொன்னால் அவருக்கு தேவனுக்குரிய பண்புகள் இருக்கவேண்டும். பொதுவாக தேவனுக்குரிய பண்புகள் என்று சொல்லும்பொழுது சர்வ வியாபி, சர்வ வல்லவர், சர்வஞானி (Omnipresent, Omnipotent, Omniscient) ஆகியவை பிரதானமாக இருக்கிறது. அடிப்படையாக சில விஷயங்களை நாம் புரிந்து கொள்ளவேண்டும். 'சர்வ' என்று சொல்லும் பொழுது 'எல்லாம்' என்பது தான் அதனுடைய அர்த்தமாக இருக்கிறது. 'Omni' என்பது ஆங்கில வார்த்தை அல்ல; அது ஒரு லத்தீன் வார்த்தையாகும். மாருதி சுசுகி நிறுவனத்தில் 'Omni' என்கிற ஒரு வாகனம் இருக்கிறது; அதில் குறிக்கப்பட்டுள்ள 'Omni' என்பதற்கு 'All' என்பது தான் அர்த்தம். ஆட்களை ஏற்றி செல்வதற்கும், பொருட்களை ஏற்றி செல்வதற்கும் அதே நேரத்தில் ஆம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தியாகவும் பயன்படுத்தப்படுவதால் அந்த வாகனத்திற்கு 'Omni' (ஆம்னி=எல்லாம்) என்று பெயர் வந்தது.

1. **சர்வ வியாபி – எல்லா இடங்களிலும் நிறைந்து இருக்கக்கூடியவர் (சங்கீதம் 139:7-10)**
   - உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.
2. **சர்வ வல்லவர் – எல்லா வல்லமையையும் உடையவராக இருக்கிறார்**
   - தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் (லூக்கா 1:35)
   - ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் (1 பேதுரு 3:18)
3. **சர்வஞானி – எல்லாவற்றையும் அறிந்தவர்**

   சர்வ ஞானி என்று சொன்னால் எல்லாவற்றையும் அறிந்தவர். உதாரணத்திற்கு நாம் ஒன்றையும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை; தேவனுக்கு நாம் ரிப்போர்ட் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை காரணம் எல்லாவற்றையும் அறிந்தவராக இருக்கிறார். அதற்காக நாம் ஜெபிக்க வேண்டாம் என்கின்ற அவசியமில்லை; நம்முடைய வாயிலிருந்து சொல் பிரவாவதற்கு முன்னமே நாம் வேண்டிக்கொள்வது என்னவென்று அவர் அறிந்திருக்கிறார். அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் அவருக்கு மறைவானது ஒன்றும் இல்லை. அதுபோலவே ஆவியானவரும் எல்லாவற்றையும் அறிந்தவராக இருக்கிறார்.
   - நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான் (1 கொரி 2:10,11).
   - கர்த்தருடைய ஆவியை அளவிட்டு, அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்து, அவருக்குப் போதித்தவன் யார்? தமக்கு அறிவை உணர்த்தவும், தம்மை நியாயவழியிலே உபதேசிக்கவும் தமக்கு ஞானத்தைக் கற்றுக்கொடுக்கவும், தமக்கு விவேகத்தின்வழியை அறிவிக்கவும், அவர் யாரோடே ஆலோசனைபண்ணினார்? (ஏசாயா 40:13, 14)

தேவனைப் போல பரிசுத்த ஆவியானவரும் சர்வ வியாபி, சர்வ வல்லவர், சர்வஞானி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பது இதன் மூலமாக நிரூபணமாகிறது.

4. **தேவனைப் போல பரிசுத்த ஆவியானவரும் நித்தியமானவராக இருக்கிறார்.**

- நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! (எபி 9:14)

5. **தெய்வீக செயல்கள் மூலம் பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக்கிறார்**

'தெய்வீக செயல்கள் பரிசுத்த ஆவியானவருக்கும் இருக்கிறது. வேதாகமத்தின் ஆரம்பம் முதல் முடிவு வரைக்கும் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்பது சுவாரசியமான ஒன்றாகும்.

i. <u>படைப்பிலே பரிசுத்த ஆவியானவர் காணப்படுகிறார்</u>

- பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் (ஆதியாகமம் 1:2).
- தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்; அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று (யோபு 26:13).
- யோபுவின் வார்த்தை: தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வவல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது (யோபு 33:4).
- நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர் (சங்கீதம் 104:30 )

ii. <u>ஜீவனைக் கொடுப்பதில் பரிசுத்த ஆவியானவர் காணப்படுகிறார்</u>

- புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது (2 கொரி 3:6).
- கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே (ரோமர் 8:2); அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:11). *ஆவிக்குரிய உயிர்ப்புக்கும் சரீர பிரகாரமான உயிர்ப்புக்கும் பரிசுத்த ஆவியானவரும் காரணமாக இருக்கிறார்.*
- தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் (லூக்கா 1:35)

6. **பரிசுத்த ஆவியானவரின் பெயரானது தேவனோடும் இயேசு கிறிஸ்துவோடும் இணைந்திருப்பதால் பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக்கிறார்**

- வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்களுண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே (1 கொரி 12:4 - 6).
- உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபே 4:4 - 6).
- ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, (மத் 28:19)
- கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென் (2 கொரி 13:14).

இந்த வசனங்களில் பரிசுத்த ஆவியானவருடைய பெயரானது தேவனோடும் இயேசு கிறிஸ்துவோடும் இணைந்து சமமாக வருவதனால் பரிசுத்த ஆவியானவர் தேவனாக காணப்படுகிறார்.

7. **தேவனுடைய வார்த்தைகளானது பரிசுத்த ஆவியானவருடைய வார்த்தைகள் என்பதால் அவர் தேவன் என்பதை அது விளக்குகிறது.**

- ஆண்டவர் ஏசாயா தீர்க்கதரிசியிடம் சொல்லுகிறார்: பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். அப்பொழுது அவர்: நீ போய், இந்த ஜனங்களை நோக்கி: நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல். இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார் (ஏசாயா 6:8-10 = அப் 28:25-27)
- இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் (சங்கீதம் 95:8-11 = எபி 3:7-9)
- இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரேமியா 31:31-34 = எபி10:15-17).

8. **நேரடியாகவே பரிசுத்த ஆவியானவர் தேவன் என வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது**

- பேதுரு அவனை நோக்கி: அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்னும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான் (அப் 5:3,4).
- நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரி 3:16). உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? (1 கொரி 6:19)
- கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு (2 கொரி 3:17).

ஆகவே, பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பது இந்த ஆதாரங்களின் மூலமாக நிரூபணமாகிறது. ஒரு மனிதன் பரிசுத்த ஆவியானவரை தேவன் என்று ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் அவனுடைய விசுவாசம் வீணாக இருக்கிறது.

## C. பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகள்

கர்த்தராகிய தேவன், இயேசுகிறிஸ்து, பிதாவானவர் மூவரும் சமமானவர் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். சிலர் மனுஷிக ரீதியாக அனுப்பப்பட்டவரை விட அனுப்பினவர் பெரியவர் என்று நினைக்கிறார்கள். மூவருடைய செயல்களிலே வித்தியாசங்கள் இருக்கிறதே ஒழிய அவர்கள் மூவரும் சமமானவர்களே! மூன்று தெய்வங்கள் அல்ல… ஒரே தெய்வம். மூவரும் ஒன்றாக இருக்கிறார்கள்; மூவரும் ஆள்த்தன்மையுடையவர்கள் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

### 1. ப.ஏ—ல் (பெந்தேகோஸ்தே நாளுக்கு முன்பு) அவருடைய கிரியைகள்

i. <u>சிருஷ்டிப்பில் தேவ ஆவியானவர்</u>

- பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் (ஆதி 1:2).
- தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்; அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று (யோபு 26:13).
- தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வவல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது (யோபு 33:4).

ii. <u>மனிதர்களை கொண்டு பேசுவதில் தேவ ஆவியானவர்</u>

- கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது (2 சாமு 23:2) - ஆவியானவர் மனிதர்களைக் கொண்டு பேசுகிறார்.
- நானோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும் இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன் (மீகா 3:8)
- நீர் அநேக வருஷமாக அவர்கள்மேல் பொறுமையாயிருந்து, உம்முடைய ஆவியினால் பேசின உம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டாலும், அவர்கள் செவிகொடாதபடியினாலே, அவர்களை அந்நிய தேசஜனங்களின் கையில் ஒப்புக்கொடுத்தீர் (நெகேமியா 9:30).
- உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக்குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள் (1 பேதுரு 1:10, 11)

iii. <u>நியாயம் விசாரிப்பதில் பரிசுத்த ஆவியானவர்</u>

மனிதர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி அவர்களைக் கொண்டு நியாயம் விசாரிக்கிறவராக இருக்கிறார்.

- அவன் (ஒத்னியேல்) மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால், அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, யுத்தம்பண்ணப் புறப்பட்டான்; கர்த்தர் மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார்; ஆகையால் அவன் கை கூசான்ரிஷதாயீமின் மேல் பலங்கொண்டது (நியா 3:10).
- அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார்; அவன் எக்காளம் ஊதி, அபியேஸ்ரியரைக் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்து…(நியா 6:34)
- தன் கண்களை ஏறெடுத்து, இஸ்ரவேல் தன் கோத்திரங்களின்படியே பாளயமிறங்கியிருக்கிறதைப் பார்த்தான்; தேவ ஆவி அவன்மேல் (பிலேயாம்) வந்தது. அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: பேயோரின் குமாரனாகிய பிலேயாம் சொல்லுகிறதாவது, கண் திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது…(எண் 24:2,3)

iv. <u>தீர்க்கதரிசிகளை கொண்டு பரிசுத்த ஆவியானவர் விசேஷித்த வேலைகளை செய்வதற்காக பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல்</u>

- பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை

அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவஆவியினால் நிரப்பினேன் (யாத் 31:1-5; யாத் 35:33)

## 2. பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் செய்த கிரியைகள்

i. <u>இயேசு கிறிஸ்துவின் பிறப்பில்</u>

- இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாராகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது (மத் 1:18) - பரிசுத்த ஆவியின் வல்லமையால் மரியாள் கர்ப்பவதியானாள்.

ii. <u>இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தில்</u>

- இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார் (மத் 3:16)

iii. <u>இயேசு கிறிஸ்துவின் சோதனையில்</u>

- அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார் (மத் 4:1).

iv. <u>இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில்</u>

- நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார் (அப் 10:38)
- கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார் (லூக்கா 4:18)
- நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே (மத் 12:28) - அற்புதங்களை செய்கிறார்.
- அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது (லூக்கா 10:21)

v. <u>இயேசு கிறிஸ்துவின் மரணத்தில்</u>

- நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! (எபி 9:14)

vi. <u>இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில்</u>

- மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார் (ரோமர் 1:5).
- அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:11).
- தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவான் 7:39). இயேசு கிறிஸ்து தேற்றரவாளனாக பரிசுத்த ஆவியானவரை வாக்குத்தத்தமாக கொடுக்கிறார் (யோவான் 14-16)

## 3. பெந்தகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர்

- பண்டிகையின் (கூடாரப்பண்டிகை) கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவான் 7:37–39) – பழைய ஏற்பாட்டில் நிரந்தரமாக வாசம் செய்யாதவராகவும் புதிய ஏற்பாட்டில் ஒரு மனிதனுக்குள்ளாக நிரந்தரமாக வாசம் செய்யப்போகிறார் என்பதையும் இந்த வசனம் வெளிப்படுத்துகிறது.
- ப.ஏ-ல் பரிசுத்த ஆவியானவர் நிரந்தரமாக ஒரு மனிதனிடத்தில் தங்கினதில்லை. கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்; கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது (1 சாமு 16:14).

இந்த பரிசுத்த ஆவியானவர் அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளார். மட்டுமல்ல அவர் நிரந்தரமாக நம்மிடத்திலே வாசம்பண்ணுகிறார்.

- தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல (ரோமர் 8:9).
- உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவான் 14:17)

## 4. உலகத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்

i. <u>பாவத்தை குறித்து உணர்வடைய செய்கிறார்.</u> அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8). நாம் சுவிசேஷத்தை மட்டுமே அறிவிக்கிறோம் ஆனால் அந்த சுவிசேஷம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் பயனடையச் செய்ய வைக்கிறது பரிசுத்த ஆவியானவருடைய வேலையாக இருக்கிறது.

ii. <u>பரிசுத்த ஆவியானவர் அந்திகிறிஸ்துவை தடுக்க கூடியவராக இருக்கிறார்</u>. அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடைசெய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்கள். அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது (2 தெச 2:6,7).

## 5. விசுவாசியின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் செயல்கள்

i. <u>விசுவாசியின் மறு ஜென்மத்தில் அதாவது மறுபிறப்பில்:</u>

- நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5).
- மறுபிறப்பு என்றால் என்ன என்பதை குறித்து இயேசு கிறிஸ்து நிக்கோதேமுவிடம் விளக்கமாக கூறுவதை யோவான் எடுத்துரைக்கிறார் (யோவான் 3: 3–8).

➢ மறுபிறப்பின் நேரத்தையோ காலத்தையோ ஒரு மனிதன் அறிந்திருக்க வேண்டும் என்பது அவசியமல்ல ஒரு சிலருக்கு அது அறிந்திருக்கலாம் ஆனால் இது பரிசுத்த ஆவியானவருடைய செயல் என்பதால் அறிந்திருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை

➢ மறு பிறப்பு என்பது ஒரு மனிதன் புதிய பாவத்தைப் பெற்றுக் கொள்கிறவனாக காணப்படுகிறான். அதாவது அவன் நீதி உள்ள ஒரு வாழ்க்கை வாழ இந்த மறுபிறப்பு கொடுக்கப்படுகிறது.

➢ மறுபிறப்பின் மூலமாக ஒரு மனிதன் உடனடியாக பூரணமாக மாறுவதில்லை. மறுபிறப்பின் மூலம் ஒரு விசுவாசி தேவனுடைய குடும்பத்திலே சேர்க்கப்படுகிறான். அதன் பிற்பாடு தான் தேவனுடைய சாயலுக்கு நேராக ஒவ்வொரு நாளும் வளரக்கூடியவனாக காணப்படுகிறான்.

வேதத்தில் மறு ஜென்மம் என்கின்ற வார்த்தை மற்றொரு இடத்தில் வருகிறது.

- அதற்கு இயேசு: மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயம் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத் 19:28) – இங்கே மறு ஜென்மக்காலம் என்பது ஆயிரம் வருட அரசாட்சியோடு சம்பந்தப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது.

ii. <u>பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்குள் வாசம் செய்யக்கூடியவராக இருக்கிறார்</u>

- நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவான் 14:16,17).
- உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? (1 கொரி 6:19)

கொரிந்து பட்டணத்திலே இருக்கிற விசுவாசிகள் மாம்சத்துக்குரியவர்களாகத்தான் இருந்தார்கள். அனைத்து பாவங்களும் பிரிவினைகளும் விபச்சாரங்களும் கூட அங்கு காணப்பட்டன. ஆனாலும் அவர்களை பரிசுத்தவான்கள் விசுவாசிகள் என்றுதான் வேதம் கூறுகின்றன (1:2)

- ➢ இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? (1 கொரி 3:2,3)
- ➢ அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன் (1 கொரி 5:5) – விசுவாசிகள் தவறு செய்த நிலைமையில் காணப்படும்போது அவர்களுடைய சரீரத்தின் அழிவுக்காகதான் பவுல் சொல்லுகிறாரே தவிர ஆத்துமா அழிவானது ஒருபோதும் அனுமதிக்கப்படுவதில்லை.

iii. <u>பரிசுத்த ஆவியானவர் விசுவாசியை புத்திரசுவிகாரம் உள்ளவர்களாக மாற்றுகிறார்</u>

- அந்தப்படி, திரும்பவும்பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள் (ரோமர் 8:15).
- மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் (கலாத்தியர் 4:6)

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்கு…

iv. <u>சாட்சிகொடுக்கிறார்:</u> நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார் (ரோமர் 8:16).

v. <u>வேத வசனத்தின் வெளிச்சத்தை கொடுக்கிறார்:</u> தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார் (1 கொரி 2:9,10)

vi. <u>போதிக்கிறார்:</u> என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவான் 14:26)

vii. <u>வேண்டுதல்செய்கிறார் (பரிந்துபேசுகிறார்):</u> அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி

வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார் (ரோமர் 8:26,27).

viii. <u>தடைசெய்கிறார் (அ) வழி காட்டுகிறார்:</u> அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார் (அப்போஸ்தலர் 16:6,7).

## D. பரிசுத்த ஆவியின் அபிஷேகம்

அபிஷேகம் என்பதின் பொருள் நியமிக்கப்படுதல் என்பதாகும். அபிஷேகம் என்பது ஒரு தெய்வீக ஆணையாகும் – தேவனுடைய சேவைக்காக ஒருவரைப் பிரித்தெடுத்தல். பழைய ஏற்பாட்டில், மூன்று வகையான மக்கள் அபிஷேகம் செய்யப்பட்டனர்.

- **இராஜாக்கள்** : சவுல் (1 சாமுவேல் 10:1), தாவீது (1 சாமுவேல் 16:13)
- **ஆசாரியர்கள்** : ஆரோனும் அவன் குமாரரும் (யாத்திராகமம் 28:41)
- **தீர்க்கதரிசிகள்** : எலியா எலிசாவை அபிஷேகம் செய்கிறார் (1 இராஜாக்கள் 19:16)

எதற்காக? அவர்கள் இறைப்பணிக்கென்று தெரிந்துக்கொள்ளப்பட்டு பிரித்தெடுக்கப்பட்டதை அந்த அபிஷேகம் உறுதிப்படுத்தியது. அதுபோலவே புதிய ஏற்பாட்டில் எல்லா விசுவாசிகளும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாக இருக்கிறார்கள். எதற்காக? அவரை ஆராதிக்கவும், அறிவிக்கவுமே!

**கிறிஸ்துவின் அபிஷேகம்:** கிறிஸ்து என்ற பெயரின் பொருளே 'அபிஷேகம் பண்ணப்பட்டவர்' என்பதாகும்.

- ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள் (அப் 4:28).
- நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார் (அப் 10:38)
- நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் என்றும்.. (எபிரெயர் 1:9)
- "கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார். தரித்திருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்திப்படுத்தவும், என்னை அனுப்பினார் என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு வாசித்து, புத்தகத்தை சுருட்டி பணிவிடைக்காரானித்தில் கொடுத்து உட்கார்ந்தார்" லூக் 4:18–20 = ஏசாயா61:1–3ல் தீர்க்கதரிசனமானது தம்மைப்பற்றி எதற்காக அபிஷேகம் பெற்றார்; அதாவது பிரித்தெடுக்கப்பட்டார் அல்லது நியமிக்கப்பட்டார் என்பதைச் சுட்டிக்காட்டினார்.
- **நம்முடைய அபிஷேகம்:** உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார் (2 கொரி 1:21,22).
- நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப்

போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக (1 யோவான் 2:20,27).

புதிய ஏற்பாட்டில் விசுவாசிகள் ராஜாக்களும், ஆசாரியர்களும் என்றும் (வெளி 1:6; 5:10) ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாக இருக்கிறார்கள் என்றும் (1 பேதுரு 2:9) விவரிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகவே அவர்கள் அபிஷேகிக்கப்பட்டவர்கள் எனப்படுகின்றனர்.

அபிஷேக தைலம் சிரசிலே ஊற்றப்பட்டு அது எப்படி தாடியின் வழியாக வழிந்து சரீரம் முழுவதும் வருகிறதோ அதேபோல கிறிஸ்து சபைக்கு தலையாக இருப்பதினால் அவருக்குள் அபிஷேகம் பண்ணப்பட்ட நாம் அனைவரும் சபையின் அவயவங்களாக இருப்பதினால் நாமும் அவருக்குள் அபிஷேகம் பெற்றவர்களாக இருக்கிறோம்.

| அபிஷேகம் குறித்த தவறான புரிதல் | அபிஷேகம் குறித்த தெளிவு |
|---|---|
| அபிஷேகம் சிறப்பு வாய்ந்தவர்களுக்கு மட்டுமே. | ஒவ்வொரு விசுவாசிக்கும் அபிஷேகம் உண்டு (1 யோவான் 2:20) |
| அபிஷேகம் என்பது உணர்ச்சி அனுபவத்திற்காக மட்டுமே. | இது பொழுதுபோக்கிற்காக அல்ல, அதிகாரமளிப்பதற்காக. |
| நீங்கள் பாவம் செய்தால் அபிஷேகத்தை நிரந்தரமாக இழந்துவிடுவீர்கள். | பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்துகிறார் (சங்கீதம் 51:11) |

## E. பரிசுத்த ஆவியின் முத்திரை

புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் இந்த முத்திரை என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

- நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள் (எபே 1:13).
- அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார் (2 கொரி 1:22)
- அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் (எபேசியர் 4:30)

மூன்று தொடர்புடைய வசனங்களிலும் 'முத்திரையிடுதல்' என்பது ஒரு கடந்த கால செயலாகும், இனி தேடவோ சம்பாதிக்கவோ கூடிய அனுபவம் அல்ல, ஆனால் மகிழ்ச்சியடைய வேண்டிய ஒன்றாகும்.

### i. உரிமை

எருசலேம் நேபுகாத்நேச்சாரால் முற்றுகையிடப்பட்டிருந்தபோதும், ராஜாவுக்கும் தேசத்துக்கும் எதிராக தீர்க்கதரிசனம் உரைத்ததற்காக எரேமியா சிதேக்கியா ராஜாவால் கைது செய்யப்பட்டிருந்தபோதும், கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிக்கு சிறப்பு அறிவுறுத்தல்களை வழங்கினார். எரேமியாவுக்கு மீட்பு உரிமைகள் இருந்த அனதோத்தில் சில நிலங்களை வாங்கச் சொன்னார். ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டது, மேலும் நிர்ணயிக்கப்பட்ட பணம் அரண்மனைக் காவலரின் முற்றத்தில் தேவையான எண்ணிக்கையிலான சாட்சிகளுக்கு முன்பாக செலுத்தப்பட்டது. சாட்சிகள் முன்னிலையில் பத்திரம் கையொப்பமிடப்பட்டு சீல் வைக்கப்பட்டது, எரேமியா சொத்தின் புதிய சட்டப்பூர்வ உரிமையாளரானான். (32:8-10 - என் பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேல், கர்த்தருடைய வார்த்தையின்படி காவற்சாலையின் முற்றத்தில் என்னிடத்துக்கு வந்து: பென்யமீன் நாட்டு ஆனதோத்தூரிலுள்ள என் நிலத்தை நீர் வாங்கிக்கொள்ளும்; சுதந்தரபாத்தியம் உமக்குண்டு, அதை மீட்கும் அதிகாரம் உமக்கு அடுத்தது; அதை வாங்கிக்கொள்ளும் என்றான்; அப்பொழுது அது கர்த்தருடைய வார்த்தை என்று அறிந்துகொண்டேன். ஆகையால் என் பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேலின் கையில், நான் ஆனதோத்திலிருக்கிற அவனுடைய நிலத்தைக்கொண்டு, அதின் விலைக்கிரயமாகிய பதினேழு சேக்கலிடை வெள்ளியை அவனுக்கு நிறுத்துக்கொடுத்தேன். நான் பத்திரத்தில்

கையெழுத்தையும், முத்திரையையும் போட்டு, சாட்சிகளை வைத்து, வெள்ளியைத் தராசிலே நிறுத்துக்கொடுத்தபின்பு…,)

**ii. பாதுகாப்பு**

பண்டைய காலங்களில் ஒரு ராஜாவின் முத்திரை என்பது பாதுகாப்பு மற்றும் மீற முடியாத தன்மையைக் குறிக்கிறது. தானியேல் சிங்கத்தின் குகையில் வீசப்பட்டபோது, தரியு ராஜா அவரது பிரபுக்களுடன் சேர்ந்து, "தானியேலைப் பொறுத்தவரை எதுவும் மாறாமல் இருக்க" குகையின் நுழைவாயிலின் மேல் வைக்கப்பட்ட கல்லில் தங்கள் முத்திரைகளை வைத்தார் (தானியேல் 6:17). அந்த முத்திரையை ராஜாவைத் தவிர வேறு யாரேனும் உடைத்தால் உயிரை இழந்திருப்பார்கள். இதேபோல், இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறை சீல் வைக்கப்பட்டது. இயேசுவின் சீடர்கள் அவரது உடலைத் திருடி, அவரது உயிர்த்தெழுதலைப் பொய்யாகக் கூறக்கூடும் என்று பயந்து, யூதத் தலைவர்கள் கல்லில் முத்திரையிட்டு, வீரர்களுடன் அதைப் பாதுகாக்க பிலாத்துவின் அனுமதியைப் பெற்றனர் (மத்தேயு 27:62–66).

**iii. உத்தரவாதம்**

ஆவியானவர் நித்திய ஜீவனை உறுதி செய்யும் ஒரு உத்தரவாதமாக (முன்பணம் போன்றது) விவரிக்கப்படுகிறார். இது வரவிருக்கும் முழு சுதந்தரத்திற்கும் உத்தரவாதம் அளிக்கிறது. இந்தக் கருத்து எபேசியர் 1:14 இல் காணப்படுகிறது, அங்கு பரிசுத்த ஆவியானவர் நமது சுதந்தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் ஒரு வைப்புத்தொகையாக விவரிக்கப்படுகிறார். இந்த உறுதிமொழி நித்திய ஜீவன் மற்றும் எதிர்கால உயிர்த்தெழுதல் உள்ளிட்ட தேவனின் வாக்குறுதிகளின் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது. இது விசுவாசிகளுக்கு அவர்களின் எதிர்கால மகிமைப்படுத்தல் மற்றும் தேவனின் மீட்புத் திட்டத்தின் நிறைவேற்றத்தை உறுதி செய்கிறது. அவர் விசுவாசிகளில் ஒரு நல்ல வேலையைத் தொடங்கி அதை நிறைவு வரை கொண்டு செல்வார் (பிலிப்பியர் 1:5 – உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி...). ஆவியின் உறுதிமொழி என்பது விசுவாசிகள் அவருடைய ராஜ்யத்தின் முழுமையில் அனுபவிக்கும் தேவனுடனான நித்திய ஒற்றுமையின் முன்னறிவிப்பாகும்.

ஆக, ஒரு விசுவாசி இரட்சிக்கப்படும்போது அவன் பரிசுத்த ஆவிக்குள் முத்திரை போடப்படுகிறான். அவன் மாம்சத்துல வாழ்ந்தாலும் சரி ஆவிக்குரிய நிலையில் வாழ்ந்தாலும் சரி ஒருபோதும் அவனுடைய இரட்சிப்பு இழந்துபோவதில்லை. நாம் பரலோகத்துக்கு போகும் வரைக்குமாக பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உரிமையாளாராகவும் நம்மை பாதுகாக்கிறவராகவும் நமக்கு உத்திரவாதம் அளிப்பவராகவும் இருக்கிறார்.

## F. பரிசுத்த ஆவியின் நிரப்புதல்

வேதாகமத்தில் நிரப்பப்படுதல் பெரும்பாலும் கட்டுப்படுத்தப்படுதல் என்று பொருள் தரக்கூடியதாக இருக்கிறது

- லூக்கா 4:1 - இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானைவிட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு,
- அப் 6:3 - ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.
- அப் 7:55 - அவன் (ஸ்தேவான்) பரிசுத்த ஆவியிலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து: தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசு நிற்கிறதையும் கண்டு;
- அப் 11:24 அவன் (பர்னபா) நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்.
- அப் 13:52 – சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்.

எபேசியர் 5:18 இல் பவுல் மதுவால் கட்டுப்படுத்தப்படுவதை ஆவியால் நிரப்பப்படுவதோடு ஒப்பிடுகிறார். மதுவால் ஆக்கிரமிக்கப்பட்ட மனிதன் மதுவால் கட்டுப்படுத்தப்படுவது போல ஆவியால் நிரப்பப்பட்ட மனிதனும் ஆவியால் கட்டுப்படுத்தப்படுகிறான். உதாரணமாக...

- லூக்கா 4:28,29 – ஜெபஆலயத்திலிருந்த எல்லாரும் இவைகளைக் கேட்டபொழுது, கோபமூண்டு, (filled with wrath) எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டுபோனார்கள்.
- லூக்கா 5:26 - அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள்; அல்லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி (filled with fear) அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்றார்கள்.
- லூக்கா 6:11 - அவர்களோ மூர்க்கவெறிகொண்டு, இயேசுவை என்ன செய்யலாமென்று ஒருவரோடொருவர் ஆலோசித்தார்கள்.
- அப் 5:17,18 - அப்பொழுது பிரதான ஆசாரியரும் அவனுடனேகூட இருந்த சதுசேய சமயத்தாரனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து, அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்.
- அப் 13:45 - யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள்.
- ரோமர் 15:13, 14 - பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக. என் சகோதரரே, நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்;

பரிசுத்த ஆவியின் தங்குதல் (indwelling), மறுபிறப்பு இவைகளைப்போல அல்லாமல் இது மீண்டும் மீண்டும் நிகழும் அனுபவம். பரிசுத்த ஆவியின் நிரப்புதலுக்காக யாரும் ஜெபிப்பதில்லை அல்லது காத்திருப்பதில்லை. தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும்போது ஆவியால் நிரப்பப்படுகிறோம்.

- 1 தெச 5:19 – ஆவியை அவித்துப்போடாதிருங்கள்
- எபே 4:30 – அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.

## G. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்

இன்று பலர் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம், பரிசுத்த ஆவியானவரின் நிறைவு, பரிசுத்த ஆவியானவரின் முத்திரை மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகை இவைகளைப் பற்றிப் புரிந்துகொள்வதில்லை. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்ற இந்த பதத்தைத் பயன்படுத்துவதில் அநேக கருத்து வேறுபாடுகளும், குழப்பங்களும் சபைகளினுடே காணப்படுகிறது.

- சிலர் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் (அபிஷேகம்) என்பது ஒரு ஆன்மீக அனுபவத்தைக் குறிக்கிறது, அதாவது ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியின் பிரசன்னம், வல்லமை மற்றும் வரங்களால் நிரப்பப்பட்டு அந்நிய பாஷைகளை பேசும் தன்மையைக் குறிப்பிடுகின்றனர்.
- சில சபைகளில் (ஆங்கிலிகன், லூத்தரன் மற்றும் சில பாரம்பரிய சபைகள்) ஆரம்பத்தில் அந்நியபாஷையை வலியுறுத்துவதில்லை – தண்ணீர் ஞானஸ்நானத்தின் போது பரிசுத்த ஆவி அளிக்கப்பட்டு, பலப்படுத்தல் மூலம் உறுதியளிக்கப்படுகிறதாகவும், ஆன்மீக வரங்களின் வெளிப்பாடு மூலமாகவும் அதை உறுதிப்படுத்தக்கூடும்.
- இன்னும் சிலர் விசுவாசிகள் மனந்திரும்பும்போது பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாசம் செய்கிறார் (ரோமர் 8:9). ஆவியின் ஞானஸ்நானம் இரண்டாவது அனுபவம் அல்ல, மாறாக அது நிலை சார்ந்தது; அதாவது எல்லா விசுவாசிகளையும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒன்றிணைத்தல் (1 கொரி 12:13).

**ஞானஸ்நானம் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட இடத்தில் வருவதால் இந்தக் குழப்பங்கள் காணப்படுகிறது.**

### i. யோவானின் ஞானஸ்நானம் (அப்போஸ்தலர் 1:21)

இந்த ஞானஸ்நானம் முற்றிலும் இஸ்ரவேலருக்குத் தொடர்புடையதாகும் (மத்தேயு 3:1,2; லூக்கா 7:29). இது மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானம் ஆகும் (லூக்கா 3:6; அப்போஸ்தலர் 13:24). இஸ்ரவேல் ஜனங்கள் தங்களின் பாவங்களை அறிக்கையிட்டு, கர்த்தரிடம் திரும்பும்படி யோவான் அவர்களை அழைத்தான். அவர்களின் உண்மையான மனந்திரும்புதலுக்கு அடையாளமாக ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

### ii. தண்ணீர் ஞானஸ்நானம்: (அப்போஸ்தலர் 8:36 - 39)

கிறிஸ்துவும்கூட தண்ணீரில் ஞானஸ்நானம் எடுத்தார் (மாற்கு 1:9,10). தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளை கொடுத்தார் (மத்தேயு 28:19). கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாக இந்த ஞானஸ்நானம் இருக்கிறது (ரோமர் 6:4; கொலோசெயர் 2:12). இந்த ஞானஸ்நானத்தைக்குறித்து கீழ்க்கண்ட பகுதிகளில் வாசிக்கிறோம் (அப்போஸ்தலர் 8:12, 36 - 39, 16:33).

### iii. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்: (1 கொரிந்தியர் 12:13)

ஒரு நபர் மனந்திரும்பி, கிறிஸ்துவை விசுவாசித்து, தனது சொந்த இரட்சகராக அவரை ஏற்றுக் கொள்ளும்பொழுது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவர் அங்கத்தினராக மாறுகிறார். இதுவே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் ஆகும் (ரோமர் 6:3,4; கலாத்தியர் 3:27; 1 கொரிந்தியர் 12:13,27; எபேசியர் 2:15,16, 5:30).

- வேதாகமம் "ஞானஸ்நானம்" என்று இன்னும் பல விஷயங்களைப் பேசுகிறது. ரோமர் 6:3 கூறுகிறது; "இயேசு கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நம்மில் பலர் அவருடைய மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றோம் என்பது உங்களுக்குத் தெரியாதா?" நாம் பாவத்திற்கு மரித்திருப்பதை "ஞானஸ்நானம்" என்று கூறுகிறது.
- பின்னர் இயேசு மத்தேயு 20:22 இல் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் , "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஞானஸ்நானத்தை நீங்கள் பெறவும் கூடுமா?" என்று கேட்டார். கிறிஸ்து அனுபவிக்கவிருந்த துன்பமும், சிலுவையில் அறையப்படுதலும் அந்த வசனத்தில் "ஞானஸ்நானம்" என்று அழைக்கப்பட்டன. அது இயேசு அனுபவிக்க வேண்டிய பாடுகளைக் குறிக்கிறது..
- 1 கொரிந்தியர் 10:1 & 2இல், வேதம் கூறுகிறது; "இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள். இது அவர்கள் தேவனுடைய பாதுகாப்பில் இருந்ததை கூறுகிறது.

**மேலும் விளக்கமாக பார்க்கலாம்:**

### i. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம்

யோவேல் 2:28–29 - "நான் எல்லார் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்..." இந்தத் தீர்க்கதரிசனமானது ஆவியானவரின் வெளிப்பாட்டைப் பற்றிய புதிய ஏற்பாட்டுப் புரிதலுக்கு அடிப்படையாக அமைகிறது.

### ii. யோவான்ஸ்நானகன் முன்னுரைத்தல்

கிறிஸ்துவானவர் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான்ஸ்நானகன் கூறியிருக்கிறார் (மத்தேயு 3:11; மாற்கு 1:8; லூக்கா 3:16; யோவான் 1:33; லூக்கா 24:49).

### iii. இயேசுவின் வாக்குறுதி

அப்போஸ்தலர் 1:4–5, 8; 2:33 - இயேசு சீடர்களிடம், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமாகிய "பிதாவின் வாக்குறுதிக்காக" எருசலேமில் காத்திருக்கச் சொல்கிறார், அவருடைய சாட்சிகளாக இருக்கும் வல்லமையைப் பெறுவார்கள்.

### iv. பெந்தெகொஸ்தே நாள் (அப்போஸ்தலர் 2)

இது இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற முதல் பதிவு நிகழ்வாகும். திருச்சபையின் பிறப்பையும் யோவேலின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தையும் குறிக்கிறது.

லூக்கா 24:49 - ல் கூறிய வாக்குத்தத்தத்தை அப்போஸ்தலர் 1:5 - 8 வசனங்களில் மறுபடியும் உறுதி செய்திருக்கிறதைப் பார்க்கிறோம். "என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்."

பரிசுத்த ஆவியானவரின் வருகையைக் குறித்ததான இந்த வாக்குத்தத்தம் அப்போஸ்தலர் 2 - ம் அதிகாரத்தில் நிறைவேறியது. பரிசுத்த ஆவியானவர் வந்தபொழுது அனைவரும் அவருடைய வல்லமையினால் நிரப்பப்பட்டனர் (அப்போஸ்தலர் 1:8, 2:4).

**அப்போஸ்தலர் 1:4–8 & 1 கொரிந்தியர் 12:13 ஆகிய வசனங்களில் உள்ள முக்கிய அம்சங்களை பார்க்கலாம்.**

1 கொரிந்தியர் 12:13 - கிறிஸ்துவானவர் இரட்சிப்பிற்கான அனைத்துக் காரியங்களையும் செய்து முடித்து விட்டார். நாம் இரட்சிக்கப்பட்டோம் அதாவது எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். இன்னும் விளக்கமாக சொல்லுவதானால்... கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் நிலையைத் தொடர்புபடுத்துகிறது. அதாவது ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்பொழுது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கத்தினராக மாறுகிறார்.

மேலும் 1 கொரிந்தியர் 12:13 "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். இது கடந்தகால சொற்சொடரில் சொல்லப்பட்டுள்ளது.

"ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" என்ற சொற்றொடரை நாம் நேரடியாக அர்த்தம் கொள்ளமுடியாது. யாரும் நேரடியாக பரிசுத்த ஆவியை "குடிப்பதில்லை". இது ஒரு அடையாளமாக சொல்லப்பட்டுள்ளது, அதாவது தேவனுடைய ஒரே ஆவியில் "பங்கேற்பது (இணைவது)" என்பது பொருளாகும்.

அப்போஸ்தலர் 1:4 - 8இல் முதன்முதலாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நடக்கப்படுவதையும் சபையின் ஆரம்பத்தையும் இங்கு காண்கிறோம். சீஷர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரப்பப்படுவதற்குக் காத்திருந்தார்கள்; இங்கு ஆவியானவரின் வல்லமையைத் தொடர்புபடுத்துகிறது;

**இன்னும் சற்று விளக்கமாக:**

மத்தேயு 3:11 மற்றும் லூக்கா 3:16 ஆகிய இடங்களில், யோவான் ஸ்நானகன், யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற தன்னிடம் வந்த யூதர்களிடம் கூறினார்: “மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவர் என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்.” இரண்டு வசனங்களும் அடிப்படையில் ஒரே விஷயத்தைச் சொல்கின்றன. இங்கு யோவான், இயேசு பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொன்னதுமட்டுமல்லாமல் அவர் உங்களுக்கு அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொன்னார்.

மத் 3:7 - 12 - பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு: விரியன் பாம்புக்குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவர் என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும்

அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்.

வேறு வார்த்தைகளில் சொன்னால், உங்கள் இரத்த வம்சாவளியின் காரணமாக, நீங்கள் தானாகவே நீதிமான்களாகக் கருதப்படுவீர்கள் என்றோ, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவீர்கள் என்றோ நினைக்காதீர்கள். "கோடரி ஏற்கனவே மரங்களின் வேரில் வைக்கப்பட்டுள்ளது; ஆகையால், நல்ல கனிகொடாத ஒவ்வொரு மரமும் வெட்டப்பட்டு நெருப்பில் போடப்படும்." நியாயத்தீர்ப்பு வருகிறது, நம்முடைய பாரம்பரியமோ சடங்காச்சாரமோ நம்மை இரட்சிப்பதில்லை.

வசனம் 12 தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான். அதுதான் நியாயத்தீர்ப்பு !! நியாயத்தீர்ப்பில் இரண்டு விளைவுகள் இருக்கும் கோதுமை களஞ்சியத்தில் சேகரிக்கப்படும், பதர் நெருப்பால் எரிக்கப்படும். நீங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள், அல்லது நீங்கள் நெருப்பினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள். நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்.

இப்போது மாற்கு 1:8இல் இதே விஷயத்தைப் பற்றி கூறுகிறார், ஆனால் அவர் அக்கினியினால் ஞானஸ்நானம் பெறுவதைப் பற்றிய பகுதியை விட்டுவிட்டார். மாற்கு சொல்வது என்னவென்றால்; "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்:

மேலும் யோவான் 1:33இல் யோவான் ஸ்நானகன் சொல்கிறார்: ஜலத்தினால் ஞானஸ்நானங்கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவரென்று எனக்குச் சொல்லியிருந்தார்.

## H. பரிசுத்த ஆவியின் வரங்கள்

### வரம் என்றால் என்ன? அது எதற்கு?

நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது... கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் வளர்ச்சிக்காக பரிசுத்த ஆவியானவரால் விசுவாசிகளுக்கு கொடுக்கப்படும் விஷேசித்த பரிசு ஆகும். அப் 2:38 ல் சொல்லப்பட்டுள்ள பரிசுத்த ஆவியின் வரம் என்பது பரிசுத்த ஆவியானவர் தரும் வரங்கள் அல்ல, அது பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்குள் வந்து தங்குவதை குறிக்கிறது (மத் 7:11 – நன்மையானது; லூக்கா 11:13 – பரிசுத்த ஆவியானவர்).

### எல்லா விசுவாசிகளுக்கும் வரம் உண்டா?

- ஆம்! ஒவ்வொரு விசுவாசிக்கும் குறைந்தது ஒரு வாரமாவது உண்டு (1 கொரி 12:7).
- வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்களுண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே (1 கொரி 12:4–6).

### வரங்களை கொடுப்பது யார்?

வரத்தைக் கொடுப்பதில் திரியேக தேவனுடைய பங்கு இருக்கிறது.

- ரோமர் 11:29 – தேவன்
- எபே 4:7 – கிறிஸ்து
- 1 கொரி 12:7 – பரிசுத்த ஆவியானவர்

### பொதுவாக வரங்களை இரண்டாக பிரிக்கலாம்

- பேசக்கூடிய வரம் (உதாரணமாக... போதிப்பது, புத்தி சொல்லுதல் (உற்சாகப்படுத்துதல்), பற்பலபாஷைகளை பேசுதல், ஞானத்தை போதிக்கும் வசனம்)
- செயல்படக்கூடிய வரம் (உதாரணமாக... ஊழியம், பகிர்ந்து கொடுத்தல், அற்புத வரம், இரக்கம் காட்டுதல்)

- பரிசுத்த ஆவியின் வரம் என்பது தாலந்து அல்ல. இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது. வரம் தேவன் தருவது; தாலந்து என்பது பிறப்பினாலும் கற்றுக்கொள்ளுவதினாலும் வருவது.

- வரம் நாம் விரும்பி கேட்பது கிடையாது. பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தின்படி பகிர்ந்து கொடுக்கிறார் (1 கொரி 12:11)
- ஆவிக்குரிய வரங்கள் இருந்தால் ஆவிக்குரியவர்கள் என்பது அர்த்தம் அல்ல பவுல் அன்பே முக்கியம் என்கிறார் (1 கொரி 14:1).
- கொரிந்து சபையார் வரத்தில் குறைவுள்ளவர்கள் அல்ல (1:7) ஆனால் அதை சரியாக பயன்படுத்தாமல் மாம்சத்திற்குரியவர்களாக இருந்தார்கள் (3:1)

**எத்தனை வரங்கள் உள்ளன?**

1. அப்போஸ்தலர் (1 கொரி 12:28; எபே 4:13)
2. தீர்க்கதரிசி (எபே 4:13)
3. குணமாக்கும் வரம் (1 கொரி 12:9;28)
4. அற்புத வரம் (1 கொரி 12:28)
5. பற்பலபாஷைகளை பேசுதல் (1 கொரி 12:10)
6. பாஷைகளை வியாக்கியானம் செய்தல் (1 கொரி 12:10)
7. ஆவிகளைப் பகுத்தறிதல் (1 கொரி 12:10)
8. ஞானத்தை போதிக்கும் வசனம் (1 கொரி 12:8)
9. அறிவை உணர்த்தும் வசனம் (1 கொரி 12:10)
10. விசுவாசம் (1 கொரி 12:8)
11. போதித்தல் (ரோமர் 12:7; எபே 4:11)
12. ஊழியம் (ரோமர் 12:7; 1 கொரி 12:28; எபே 4:12)
13. ஆளுகை (ரோமர் 12:7; 1 கொரி 12:28)
14. புத்தி சொல்லுதல் (ரோமர் 12:8)
15. பகிர்ந்து கொடுத்தல் (ரோமர் 12:8)
16. இரக்கம் காட்டுதல் (ரோமர் 12:8)
17. சுவிசேஷகன் (எபே 4:11)
18. மேய்ப்பர் – போதகர் (எபே 4:11)

**எபே 4:11–13இல் சொல்லப்பட்டுள்ள வரங்கள்**

மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.

அப்போஸ்தலர் & தீர்க்கதரிசி – இவைகள் ஆதி திருச்சபையின் வளர்ச்சிக்கு கொடுக்கப்பட்ட தற்காலிக வரங்கள் ஆகும்.

**1. அப்போஸ்தலர்**

'அப்போஸ்தலர்' என்பதற்கு ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக வெளியே அனுப்பப்பட்டவன் என்று பொருள்.

- எபி 3:1 – இயேசு கிறிஸ்து (இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்)
- லூக்கா 6:13 – 12 சீஷர்கள் (பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்)
- 1 கொரி 15:9 – பவுல் (நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்)
- அப் 14:14 – பர்னபா (அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபொழுது,)

- 1 தெசலோ 2:6 – பவுல், சீலா, தீமோத்தி (நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக்கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை)

2. **தீர்க்கதரிசி**

தீர்க்கதரிசிகளில் இரு வகை உண்டு.

I. <u>நடக்கபோகும் காரியங்களை முன்கூட்டியே அறிவிப்பவர்கள்</u>

- அப் 13:1 – பர்னபா, சிமியோன், லுகி, மனாயீன், பவுல்
- அப் 21:9 – பிலிப்பின் குமாரத்திகள்
- அப் 21:10 – அகபு

II. <u>சொன்ன தீர்க்கதரிசன வசனங்களை மக்களுக்கு விளக்கி (எடுத்து) சொல்லுதல்.</u>

நாம் சொல்லும் தீர்க்கதரிசனமானது வசனத்திற்கு விரோதமாக இல்லாமல் அதன்படி இருக்க வேண்டும் (ரோமர் 12:6 – நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன் – let us prophesy according to the proportion of our faith;). இவ்விரண்டும் சபையின் வளர்ச்சிக்காக கொடுக்கப்பட்ட அஸ்திபார வரங்கள் (எபே 2:20).

இது தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கு அற்புத அடையாளங்களோடு இந்த வரங்களும் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்டது. ஆனால், சுவிசேஷகன் & மேய்ப்பர் – போதகர் ஆகிய வரங்கள் தற்போதும் திருச்சபையின் வளர்ச்சிக்கு கொடுக்கப்பட்ட நிரந்தர வரங்கள் ஆகும்.

3. **சுவிசேஷகன்**

எல்லா விசுவாசிகளும் சுவிசேஷகன் அல்ல; ஆனால், கிறிஸ்துவுக்கு சாட்சியாய் இருக்கிறார்கள். ஆகவே கிறிஸ்துவை அறிவிப்பது அவர்கள் மேல் விழுந்த கடமை. ஆனால் வரம் பெற்றவர்கள் சிறப்பாக செயல்படுவார்கள்.

1 பேதுரு 2:9 – நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

1 கொரி 9:16 – சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.

4. **மேய்ப்பர் & போதகர்**

கண்காணி (Bishop), மூப்பர் (Elder), மேய்ப்பர் (Pastor) – இம்மூன்றும் ஒரே நபரையே குறிக்கிறது.

- எபே 4:12,13 – மந்தையை மேய்ப்பவன் மேய்ப்பன் (பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.
- அப் 20:17,18,28 - மந்தையை மேய்க்கும் கண்காணி (மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான். அவர்கள் தன்னிடத்தில் வந்து சேர்ந்தபொழுது, அவன் அவர்களை நோக்கி: ...ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்).
- 1 பேதுரு 5:1–3 – மூப்பன் மந்தையை மேய்க்கனும் (உங்களிலுள்ள மூப்பருக்கு உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை

இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்).

- எல்லா இடங்களிலும் பண்மையில் சொல்லப்பட்டிருக்கிறது (பிலி 1:1; அப் 11:30; 14:23; 20:17; தீத்து 1:5)
- இது பதவி அல்ல வேலை (1 தீமோ 3:1)

<u>சபையின் தலைவர்கள் (''மூப்பர்கள்'', ''கண்காணிகள்'', ''மேய்ப்பர்கள்'')</u>

கிறிஸ்தவ சபைகளில் தலைவர்கள் இந்நாட்களில் ''மூப்பர்'' (Elder), ''கண்காணி'' (Bishop/Overseer), மற்றும் ''மேய்ப்பர்'' (Pastor/Shepherd) என அழைக்கப்படுகிறார்கள்.. வெவ்வேறு சபை பிரிவினர்கள் இம்மூன்று பதங்களை முற்றிலும் மாறுபட்ட வெவ்வேறு நபர்களாக பாவிக்கிறார்கள். ஆனால் வேதம் இவைகளுக்கு மாறாக இம்மூன்று பதங்களும் ஒரே நபரை குறிப்பிட்டு அவர்கள் மேல் இருக்கும் வெவ்வேறு பொறுப்புகளை அல்லது கடமைகளை வலியுறுத்துகிறது.

a. மூப்பர் (Elder)

''மூப்பர்'' என்கிற சொல் ''பிரஸ்புட்டேரோஸ்'' என்கிற கிரேக்கச்சொல்லில் இருந்து வருகிறது. இச்சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல் ''Elder'' என்பதாகும். இச்சொல்லின் பொருள் ''முதிர்ச்சி'' அல்லது ''ஆவிக்குரிய பகுத்தறிவு மற்றும் தேர்ச்சி'' (indicates the mature spiritual experience and understanding) என்பதாகும்.

மேலும் இந்த பெயர்ச்சொல் புதிய ஏற்பாட்டில் யூதர்களுடைய மூப்பர்கள் சங்கத்தையும் (the Council or Senate among the Jews, லூக்கா 22:66; அப் 22:5) சபையினுடைய மூப்பர்கள் சங்கத்தையும் குறிக்கிறது (the ''elders'' in a local church ''the presbytery'' 1 தீமோ. 4:14; அப். 14:23; 20:17; பிலி. 1:1; தீத்து 1:5; யாக்கோபு 5:14)

b. மேய்ப்பர் (Shepherd/Pastor)

மேய்ப்பர் அல்லது மேய்ப்பன் என்கிற சொல் ''பொய்மேன்'' என்கிற கிரேக்கச்சொல்லில் இருந்து வருகிறது. இச்சொல்லின் இணையான ஆங்கிலச்சொல் ''Shepherd'' அல்லது ''Pastor'' என்பதாகும். ஆட்டுமந்தையை மேய்த்து, கண்காணித்து பராமரித்து வரக்கூடிய ஒரு மேய்ப்பனின் வேலையை சுட்டி காட்டுகிறது. (எபே. 4:11; அப். 20:28; 1 பேதுரு 5:1, 2).

c. கண்காணி (Bishop/Overseer)

''கண்காணி'' என்கிற சொல் ''எப்பிஸ்கோப்போஸ்'' என்கிற கிரேக்கச்சொல்லில் இருந்து வருகிறது. இச்சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல் ''Bishop'' அல்லது ''Overseer'' என்பதாகும். இதன் பொருள் ''மேற்பார்வையிடு'' அல்லது ''கண்காணி'' (to look over or watch) என்பதாகும்.

அதாவது ஈடுபடுகிற வேலையினுடைய சுபாவம் அல்லது குணாதிசயத்தை இது வெளிப்படுகிறது (indicates the character of the work undertaken). (அப். 20:28; பிலி.1:1; 1 தீமோ. 3:2; தீத்து 1:7; 1 பேதுரு 2:25; 5:3)

a) <u>அப் 20:17, 28-30</u>

அப்போஸ்தலனாகிய பவுல் தனது மூன்றாவது சுவிசேஷ யாத்திரையின் போது, பெந்தெகொஸ்தே பண்டிகை நாளிலே எருசலேமில் இருக்க வேண்டுமென்று தீவிரப்பட்டு பிரயாணம் செய்த வேளையில், மிலேத்து பட்டிணம் வந்தபோது அங்கிருந்து எபேசு பட்டிணத்துக்கு ஆள் அனுப்பி எபேசு சபையின் மூப்பரை வரவழைத்து அவர்களோடு சம்பாஷித்த சம்பாஷனை தான் இவ்வேத பகுதியின் உள்ளடக்கமாகும்.

- பவுல் எபேசு சபையின் மூப்பரை அல்லது மூப்பர்களை வரவழைக்கிறார் (வச.17) இங்கே ''மூப்பனை'' (elder) அல்ல ''மூப்பரை'' அல்லது ''மூப்பர்களை'' (elders), அதாவது ஒருமையில் அல்ல பன்மையில் கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒரு ஸ்தல சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருப்பது தெளிவாகிறது.
- வச. 28–ல், ''உங்களை'' அதாவது ''மூப்பர்களைக்'' குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட **தமது சபையை மேய்ப்பதற்குப்** (to pastor or shepherd) பரிசுத்த ஆவி உங்களைக் (மூப்பர்களை, elders) **கண்காணிகளாக** (Bishops or Overseers) வைத்த மந்தை (church) முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள், என்று

வாசிக்கிறோம். இங்கே எபேசு சபையின் மூப்பர்களோடு தேவனுடைய சபையை மேய்க்கும்படி அதாவது மேய்ப்பர்களாக இருந்து சபையை போஷிக்கும்படி பரிசுத்தஆவி ஏற்படுத்தின கண்காணிகள் என்று வாசிக்கிறோம்.

- வச. 29, 30–ல் எபேசு சபையின் மூப்பர்கள் அதாவது எபேசு சபையின் கண்காணிகள், மந்தையாகிய தேவனுடைய சபையை ஓநாய்களிடமிருந்து தப்புவித்து, மாறுபாடான போதகங்களுக்கு விலக்கி மீட்க வேண்டும் என்று மேய்ப்பர்களுடைய வேலையை சுட்டி காட்டுகிறது.

மேற்கூறப்பட்டிருக்கிற குறிப்புகளின் அடிப்படையில், நமக்கு தெள்ளத்தெளிவாகிற ஓர் மறுக்கமுடியாத சத்தியம் என்னவென்றால், மூப்பர்கள், கண்காணிகள் மற்றும் மேய்ப்பர்கள் ஒரு கூட்டத்தினரையே அதாவது ஒரு நபரையே குறிப்பிடுகிறது.

வேறு விதத்தில் கூறினால், மூப்பர்கள் (elders) நாங்கள் கண்காணிகளும் (Bishops/Overseers) அல்ல மேய்ப்பர்களும் (Pastors/Shepherds) அல்ல என்று கூற இயலாது. அதுபோலவே கண்காணிகளும் (Bishops/Overseers) மேய்ப்பர்களும் (Pastors/Shepherds) நாங்கள் மூப்பர் அல்ல என்று கூற இயலாது.

b) <u>தீத்து 1:5-9</u>

- வச. 5-ல், அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவை கிரேத்தா தீவிலே விட்டு வந்ததின் காரணத்தை இங்கே கூறுகிறார், அதாவது தீத்து பட்டணங்கள் தோறும் "மூப்பரை" அதாவது "மூப்பர்களை" ஏற்படுத்தவேண்டும்.
- வச. 6 – 9 – ல் மூப்பர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளை விவரிக்கிறார் பவுல். வசனம் 7-க்கு வரும்போது, "கண்காணியானவன்" என்று வாசிக்கிறோம். அதாவது இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற தகுதிகள் கண்காணிகளுக்கு என்று தெளிவாகிறது. அதேவேளையில், மூப்பர்களுக்கான தகுதிகள் என்பதிலும் எவ்வித சந்தேகமில்லை.

c) <u>1 பேதுரு 5:1-3</u>

- வச.1 இல் பேதுரு மூப்பர்களிடம் உங்களிலுள்ள "மூப்பருக்கு" உடன் மூப்பன் என்று கூறுகிறார்.
- வச. 2 இல் இந்த மூப்பர்களிடம் தேவனுடைய மந்தையை நீங்கள் "மேய்த்து" (pastor)... என்று கூறுகிறார்.
- வச.3இல், "கண்காணிப்பு" (bishop / oversee) செய்யுங்கள் என்று கூறுகிறார்.

<u>காரியத்தின் கடைத்தொகை...</u>

- ஒரு மூப்பராக சபையின் தேவையை நிதானித்து அறிந்து ஆவிக்குரிய வளர்ச்சியில் வளர்க்க வேண்டும்;
- ஒரு மேய்ப்பராக மந்தையை (சபையை) ஓநாய்களுக்கு தப்புவித்து (மாறுபாடான போதகங்களுக்கு விலக்கி) காக்கவேண்டும்;
- ஒரு கண்காணியாக எப்பொழுதும் உண்மையுள்ள உக்கிராணக்காரனைப் போல நோக்கமாயும் விழிப்போடும் இருக்க வேண்டும்.

<u>விசுவாசிகளின் பொறுப்பு</u>

a. எபி 13:18 – எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்;
b. எபி 13:24 – உங்களை நடத்துகிறவர்களையும், பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த்துங்கள்.
c. 1 தீமோத்தேயு 5:17,18 – நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாக திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும். வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே (மத்தேயு 10:10).
d. எபி 13:17 – உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்;

அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.

e. பிலிப்பியர் 4:10 - என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்;

f. பிலிப்பியர் 4:16,17 – நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன்.

**5. அந்நியபாஷை வரம்.**

அந்நியபாஷை என்பது, பேசுகிறவர் ஒருபோதும் கற்றிராத புதிய பாஷையை, கேட்கிற பாஷைக்காரர்கள் விளங்கி கொள்ளத்தக்கதாக தெளிவாக **தேவ பெலத்தால்** பேசுவதாகும். இது மனித முயற்சியால் கற்றுக்கொள்வதல்ல. அந்நியபாஷை என்று மொழிபெயர்க்கப்படும் கிரேக்க சொல்லின் நேரடியான பொருள் "மொழிகள்" என்பதாகும். இதுவும் திருச்சபையின் வளர்ச்சிக்காக தேவன் கொடுத்த தற்காலிக வரமாகும்.

- பேசுகிறவனுக்கு அந்நியபாஷை; கேட்கிறவனுக்கு தாய்பாஷை

➢ வேதாகமத்தில் அந்நியபாஷை பேசின இடங்களிலெல்லாம் மனிதர்கள் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில்தான் காணப்பட்டது. "மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நியபாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?" (1 கொரிந்தியர் 14:6). ***...****நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள். (அப் 2:7–11).*

<u>தூதர் பாஷைகள் என்றால் என்ன?</u>

➢ அந்நியபாஷை என்பது, மனிதனுக்கு புரியாத நிலையில் அது பரலோக பாஷையோ அல்லது தூதர்கள் பாஷையோ அல்ல. 1 கொரிந்தியர் 13:1-ல் "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்." இங்கே அர்த்தமில்லாத ஓசைகள் மற்றும் சத்தம் மூலம் என்ன பிரயோஜனம்; **அன்பே பிரதானம்** என்பதையும் எடுத்துரைத்து கண்டிக்கிறார்.

➢ அதை தெளிவுபடுத்துவதற்காக பவுல் எடுத்துக்காட்டாக கூறுவதுதான் இந்த தூதர் பாஷைகள். அதாவது **ஏகதேச உருவக அணியைப்** பயன்படுத்துகிறார். *(இரண்டு பொருள்களில் ஒன்றை மட்டும் வேறொன்றாகக் கூறி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது இந்த அணியின் சிறப்பாகும்)* <u>உதாரணமாக,</u> உங்கள் நண்பர் ஒருவரை கடைத்தெருவில் பார்க்கிறீர்கள். சிறிது நேரத்திற்கு பிறகு அவரது வீட்டுக்கு போகிறீர்கள், அவர் அங்கே இருக்கிறார். இப்பொழுது அவரைப் பார்த்து ஆச்சரியத்தோடு கேட்கிறீர்கள்: "நண்பா எப்படி இவ்வளவு சீக்கிரமாக வீட்டிற்கு வந்தாய்? பறந்து வந்தாயா?" என்று. இதன் அர்த்தம் உங்கள் நண்பருக்கு இறக்கைகள் இருப்பதாகவோ **அதன் மூலமாக அவர் பறந்து வந்ததாகவோ அர்த்தமல்ல; மாறாக அவரது துரிதத்தை அல்லது விரைவாக வீடு வந்ததைக் குறிக்கிறது.** அதே போல அப்போஸ்தலனாகிய பவுல் அன்பு மிக முக்கியம்; அன்பில்லை என்றால் எல்லாம் வீண் என்பதை சுட்டிக்காட்டுவதற்காக தூதர் பாஷைகளைக் கொண்டுவருகிறார்.

➢ ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையுள்ள 66 புத்தகங்களிலும் எங்கெல்லாம் தூதர்கள் தோன்றி பேசினார்களோ அவ்விடங்களிலெல்லாம் மனிதர்கள் பேசின பாஷைகளை பேசினார்களேயல்லாமல் வேறொரு பாஷைகளை அவர்கள் பேசவில்லை. அப்படி அவர்கள் தூதர்களுடைய பாஷைகளில் பேசியிருந்தால் கேட்டவர்களாகிய ஆபிரகாம், ஆகார், யாக்கோபு மற்றும் எவரும் புரிந்துகொள்ள முடியாது.

<u>அந்நியபாஷைக்கு பயன்படுத்தப்பட்ட வித்தியாசமான வார்த்தைகள்</u>

➢ அந்நியபாஷை (அப் 19:6) – Foreign Language

➢ பலபாஷை (அப் 10:45) – More than one Language

- வெவ்வேறு பாஷை (அப் 2:4) – Different Language
- பற்பலபாஷை (1 கொரி 12:10) – Different Language
- நவமான பாஷை (மாற்கு 16:17) – New Language

<u>எல்லோரும் அந்நியபாஷையில் பேசுவது கட்டாயமா?</u>

நமது சரீரத்தில் உள்ள அனைத்து அவயவங்களும் ஒரே பணியை செய்வது இல்லை. அதுபோல எல்லோரும் அந்நியபாஷை பேசவேண்டும் என்பது கட்டாயம் அல்ல. <u>1 கொரி 12:29,30</u> – எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?

<u>பெந்தெகொஸ்தே நாளில் அந்நியபாஷைகளில் பேசினது 12 பேரா (அ) 120 பேரா?</u>

<u>**பின்னணி:**</u> அப் 1:12–15 - அப்பொழுது அவர்கள் (சீஷர்கள்)... ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். அவர்கள் அங்கே வந்தபோது மேல்வீட்டில் ஏறினார்கள்; அதில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்புவும், தோமாவும், பர்த்தொலொமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் தங்கியிருந்தார்கள். அங்கே இவர்களெல்லாரும் (11 பேர்), ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று... (16–26) சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான். பன்னிரண்டாவது அப்போஸ்தலனாக மத்தியா சேர்க்கப்படும் சமயத்தில் 120 பேர் கூடி இருந்தார்கள் என்றும்,

<u>**பின்னணி:**</u> பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் (12 அ 120 பேர்) ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள் (1:26=2:1).

அப்.1:5-ல் எருசலேமை விட்டுப்போகாமல் இயேசுவினிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருக்கவேண்டும் என்கிற கட்டளையை பெற்றவர்கள் அப்போஸ்தலர்களே. பிதாவின் வாக்குத்தத்தம் அப்போஸ்தலர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அருளப்பட்டது (அப்.1:4).

அப்.1:26 மற்றும் 2:1 வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிற பெயர்ச்சொல், மறுபெயர்ச்சொல் மற்றும் பெயரடைச்சொல் (Noun, Pronoun, Adjective) யாவும் ஆண்பாலில் மட்டுமே (Masculine Gender) பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அந்நியபாஷைகளில் பேசப்படுவதைக்கேட்ட கூடியிருந்தவர்கள் யாவரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? என்று கூறினார்கள் (அப்.2:7). இந்த கலிலேயர் என்கிற அடைச்சொல் அப்போஸ்தலர்களைக் குறிப்பதற்காக மட்டும் பிரத்யேகமாக பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டு கொள்ளலாம் (லூக்கா 22:59; அப்.1:11).

பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் ஆவியினால் நிறைந்து அவரவர்களுக்கு தந்தருளப்பட்ட வெவ்வேறு பாஷைகளில் பேசினதைக் கேட்ட கூடியிருந்த ஜனங்கள்: "இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம்பண்ணினார்கள்", இதைக்கண்ட அப்போஸ்தலனாகிய பேதுரு **பதினோருவரோடுங்கூட எழுந்து நின்று** பிரசங்கம் தொடங்குவதை அறிந்துக்கொள்ளலாம் (அப்.2:14). இங்குள்ள வித்தியாசத்தை கவனியுங்கள் *அப்.1:15-ல் நூற்றிருபதுபேர் கூடியிருந்த போது, அவர்கள் நடுவில் பேதுரு எழுந்து நின்று...* பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் முடிவில் தங்களுடைய "இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, **பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து:** சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்பதைக் கவனியுங்கள் (அப்.2:37). நூற்றிருபது பேரைப்பார்த்து அல்ல; சகோதர சகோதரிகளே என்றும் அல்ல ஆண்பால் (masculine gender) தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு

காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே (1 கொரி 14:34,35).

ஆக, பெந்தகோஸ்தே நாளில் 120 பேர் அல்ல, (ஒருவேளை அவர்கள் கூடிவந்திருந்தாலும்) அப்போஸ்தலர்களாகிய 12 பேர் மட்டுமே அந்நிய பாஷை பேசியிருக்கக் கூடும்.

<u>நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன் என்று ஏன் பவுல் கூறினார்?</u>

1 கொரி 14:4,5 - அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான். நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்; ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்; ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களாகவேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்.

1 கொரி 14:19 – நான் சபையில் அந்நியபாஷையிலே பதினாயிரம் வார்த்தைகளை பேசுகிறதிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளை பேசுகிறதே எனக்கு அதிக விருப்பம் என்கிறார்.

<u>அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணுதல் என்றால் என்ன?</u>

''நான் தனிமையிலே உற்சாகத்தோடு தேவனிடத்தில் அந்நியபாஷையில் விண்ணப்பம் பண்ணுகிறேன்'' என்று கூறிக் கொள்பவர்கள் உண்டு. 1 கொரிந்தியர் 14:14,15-ல் பவுல் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார்: ''நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.''

தனிப்பட்ட முறையிலே பேசு, தேவனோடு பேசு மற்றும் ஆவியிலே பேசு என்றெல்லாம் கூறப்படுவதற்கான காரணம் பேசுகிற பாஷை விளங்காத பாஷை என்பதால் அல்ல; மாறாக அந்த பாஷையின் அர்த்தத்தை சொல்ல யாரும் இல்லாததே (1 கொரி.14:2,28). 1 கொரி.14:28ல் ''அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்.''

<u>இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள் என்றும் பவுல் கூறுவதற்கான பிரதான காரணம்,</u> அன்று பவுலின் நாட்களில் அந்நியபாஷை வரம் எல்லோருக்கும் இல்லையென்றபோதிலும் சிலருக்கு அருளப்பட்டது. அதுமட்டுமல்ல, அது நடைமுறையில் பேசப்பட்டது;

1 கொரி 13:8-10 – அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது (வேதவசனம்) வரும்போது, குறைவானது ஒழிந்துபோம் என வசனங்களில் வாசிக்கிறோம்.

<u>அந்நியபாஷை & தீர்க்கதரிசனம் பேசுவதற்கான நிபந்தனைகள் (1 கொரி 14:27–31)</u>

வச.26 – நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது. வச. 40 - சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது.

- இரண்டுபேர் மிஞ்சினால் மூன்று பேர் மட்டும் பேசவேண்டும்
- ஒவ்வருவராய் பேசவேண்டும் – எல்லோரும்மொத்தமாக பேசக்கூடாது
- அர்த்தம் சொல்லவேண்டும் – இல்லையேல் சபையில் பேசக்கூடாது.
    - தீர்க்கதரிசிகள் இரண்டுபேராவது மூன்றுபேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள். அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன். எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்.

அப்போஸ்தலர் நடபடிகளில் அந்நியபாஷை பேசின இடங்கள்

- அப் 2:1–12 – சீஷர்கள் (யூதர்கள் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்)
- அப் 10:34 - 48 – புறஜாதிகள் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.
- அப் 19:1–7 – யோவானின் சீஷர்கள் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

## I. பரிசுத்த ஆவியானவரின் பெயர்கள்.

யோவான் 20:22இல் ‘‘அவர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள் என்று வாசிக்கிறோம்’’ கிரேக்க பதத்தில் பரிசுத்த ஆவிக்கு நியூமா என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு ‘காற்று’ அல்லது ‘சுவாசம்’ என்பது அர்த்தமாக இருக்கிறது. இங்கே ஆவியானவருக்கு ‘சுவாசம்’ என்கிற அர்த்தத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

யோவான் 15:26; 16:13,14 - ஆகிய வசனங்களில் ‘நியூமா’ என்கிற என்கிற பொதுப்பெயரானது **ஆண்பாலில்** சொல்லப்பட்டுள்ளது. ஆக, பரிசுத்த ஆவியானவரின் பண்புகளை கொண்டு அவருக்கு அநேக பெயர்கள் இருக்கிறது. சில முக்கிய பெயர்கள்: ஆலோசகர்; ஆறுதலளிப்பவர் (தேற்றரவாளர்); பரிந்துரை செய்பவர்; பலப்படுத்துபவர் என்றும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

1. தேவனுடைய ஆவி (1 கொரி 3:16) - அவருடைய தெய்வீக குணத்தையும், அவர் தேவனுடைய பிரதிநிதியாய் இருக்கிறார் என்பதையும் காண்பிக்கிறது.
2. கிறிஸ்துவின் ஆவி (ரோமர் 8:9) - கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. கிறிஸ்துவினுடைய ஆவி என்பதும் தேவனுடைய ஆவி என்பதும் மாறுபட்டதல்ல இது ஆவியானவருக்கு கிறிஸ்துவோடும் பிதாவாகிய தேவனோடும் உள்ள உறவை காண்பிக்க கூடியதாக இருக்கிறது.
3. பரிசுத்த ஆவி (லூக்கா 11:13; ரோமர் 1:5) - இந்த நாமம் பரிசுத்த ஆவியானவரின் பரிசுத்தத் தன்மையை வெளிப்படுத்துகிறது. பரிசுத்தமுள்ள இவர் நம்மைப் பரிசுத்தப்படுத்தி நமக்குள்ளே பரிசுத்தத்தை உருவாக்குகிறார்.
4. நித்திய ஆவி: (எபிரெயர் 9:14) - பரிசுத்த ஆவியானவரின் முடிவில்லாத பணியையும், நித்திய தெய்வீக குணாதிசயத்தையும், அவரின் பரிபூரண தெய்வீகத்தையும் நிரூபிக்கிறது.
5. சத்திய ஆவியானவர் (யோவான் 14:17;15:26;16:13) - பரிசுத்த ஆவியானவர் நாம் சத்தியத்தை அறிந்துகொள்ளவும், அவரில் உறுதிப்படவும் செய்கிறார். இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சிகொடுக்கிறார். நமக்குச் சகல சத்தியத்தையும் போதித்து சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்துகொள்ளச் செய்கிறார்.
6. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர் (எபேசியர் 1:13) - பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவராக வந்தார் என்பதை நாம் பார்க்கலாம் (யோவான் 14:16 - 18). நமக்குள் அவர் "முத்திரையாக’’ இருக்கிறார் (எபேசியர் 1:13). அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் ‘‘அச்சாரமாயிருக்கிறார்’’ (எபேசியர் 1:14).
7. கிருபையின் ஆவியானவர் (எபிரெயர் 10:29) - பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய கிருபையை நிர்வகிக்கிரவராகவும், பகிர்ந்து கொடுக்கிறவராகவும் இருக்கிறார் என்பதைக் காண்கிறோம்.
8. ஜீவ ஆவியானவர் (ரோமர் 8:2) - பரிசுத்த ஆவியானவரே ஜீவன் கொடுப்பவர். நம்மில் கிறிஸ்து வாழுகிறார் என்ற உண்மையை உருவாக்குகிறார்.
9. மகிமையுள்ள ஆவியானவர் (1 பேதுரு 4:14) - தாம் மகிமை நிறைந்தவராக மட்டுமல்ல, நமக்கு மகிமையை (அதாவது தேவனுடைய தன்மையைக்) கொடுப்பவராகவும்

இருக்கிறார். தேவனுடைய கிருபையை நிர்வகித்து, நமக்குப் பகிர்ந்து கொடுத்து நம்மை மகிமையடையவும் செய்கிறார் (ரோமர் 8:16,17).

10. ஞானத்தின் ஆவி (யாத் 28:3) - ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யத்தக்கதாக அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அவனுக்கு வஸ்திரங்களை உண்டாக்கும்பொருட்டு, நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதயமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக. ஆவியானவரை ஞானத்தின் ஆவி என்று சொல்லப்பட்டிருப்பதை பார்க்கிறோம்.
11. கிருபையின் ஆவி (எபிரெயர் 10:29) - அவர் கிருபையுள்ளவர்.
12. உற்சாகமான ஆவி (சங். 51:12) - அவரின் விடுதலையின் அனுபவம்
13. இரக்கத்தின் ஆவி (

## J. பரிசுத்த ஆவியானவரை குறிக்கும் அடையாளங்கள்.

பரிசுத்த ஆவியானவருக்கு வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள அடையாளங்கள் அவரின் குணத்தையும், குறிப்பிட்ட பணியையும் வெளிப்படுத்துகிறது.

1. **புறா** (மத்தேயு 3:16; மாற்கு 1:10; லூக்கா 3:22; யோவான் 1:32) – புறா தூய்மையையும் சமாதானத்தையும் வெளிப்படுத்துகிறது. புறாக்கள் செய்திகளை அனுப்பவும் பயன்படுத்தப்பட்டன. பரிசுத்த ஆவியானவரும் இவ்விதமே இருக்கிறார்.
2. **காற்று** (யோவான் 3:8; அப்போஸ்தலர் 2:1-4) – காற்றைப் பார்க்கமுடியாது. ஆனால் அது வல்லமையுள்ளது, ஊடுருவிச் செல்லக்கூடியது. மேலும் காற்று புத்துணர்ச்சி ஊட்டக்கூடியது. பரிசுத்த ஆவியானவரும் இப்படியே இருக்கிறார்.
3. **அக்கினி** (அப்போஸ்தலர் 2:3; எரேமியா 20:9) – அவர் தேவனுடைய வார்த்தையை அக்கினியைப்போல் மாற்றுகிறார் (மல்கியா 3:2). நெருப்பு எரிக்கும், தூய்மைப்படுத்தும். அதேவிதமாகப் பரிசுத்த ஆவியானவரும் கிரியை செய்கிறார்.
4. **எண்ணெய்** (யாத் 27:20, 30:31; அப் 1:8; 2:4; எபிரெயர் 1:9) – எண்ணெய் வழுவழுப்பாக்கி சுமூகமாகச் செயல்படப் பயன்படுகிறது. விசேஷமாக ஒலிவ எண்ணெய் உணவிற்கும், குணப்படுத்துதலுக்கும், விளக்கு எரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. தேவனுடைய வல்லமை ஊற்றப்படுவதற்கு அடையாளமாக, அபிஷேகம் செய்வதற்கும் எண்ணெய் பயன்படுத்தப்பட்டது.
5. **தண்ணீர்** (யோவான் 7:37-39) – தண்ணீர் நமக்குப் புத்துயிரளிக்கிறது, களைப்பிலிருந்து பழையநிலைக்குக் கொண்டுவருகிறது. நம்மைத் திருப்தியாக்குகிறது, நம்முடைய ஜீவனைக் காப்பாற்றுகிறது. பரிசுத்த ஆவியானவரும் இவ்வாறே கிரியை செய்கிறார்.
6. **முத்திரை** (எபேசியர் 1:13, 4:30) – முத்திரை என்பது நாம் யாருக்கு சொந்தமானவர்கள் (உரிமை) என்பதைக் காட்டுகிறது. நாம் தேவனுக்கு சொந்தம் என்பதற்கு அவரால் கொடுக்கப்பட்ட முத்திரையே பரிசுத்த ஆவியானவர். பரிசுத்த ஆவியானவரால் நாம் முத்திரை போடப்பட்டபடியினால் நாம் தேவனுடையப் பிள்ளைகள் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது.
7. **அச்சாரம்** (2 கொரிந்தியர் 5:5, 1:22; எபேசியர் 1:14) – ஒரு பொருளை வாங்கும்பொழுது முன்பணம் கொடுக்கப்படும். இதற்கு அச்சாரம் எனப்படும். இவை வாக்குறுதியாகவும், உத்திரவாதமாகவும் இருக்கிறது. நாம் மகிமையை சுதந்தரிப்போம் என்பதற்கு பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய உத்திரவாதமாக இருக்கிறார்.